மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

397—

கூடமலையில் மாணவர் விடுதி ஏற்படுத்துதல்

*24616—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், கூடமலையில் ஆதிதிராவிடர் பள்ளி மாணவர் விடுதி ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், கூடமலையில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் அறிக்கை பெற்று நிதிநிலைக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.

399—

துறையூரில் மீன் விற்பனை நிலையம் அமைத்தல்

*26784—**திரு. வி. ரவிச்சந்திரன்:**

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூரில் அரசு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக மீன் விற்பனை நிலையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?